# Multilingual Services - Translation



CITY OF BRAMPTON EMERGENCY MEASURES OFFICE

9-1-1

**பயன்படுத்துங்கள்.**
**துஷ்பிரயோகப்படுத்தாதீர்கள்.**

## நீங்கள் எப்பொழுது 9-1-1 இனை அழைக்கவேண்டும்?

கீழ்வருவனவற்றிற்கு காவல்துறை, தீவிபத்து, அல்லது மருத்துவ உதவியாளர்கள் உடனடியாக பிரதிவினை அளிப்பதன் அவசியம் ஏற்பட்டால்
9-1-1 இனை அழையுங்கள்:

- ஒரு தீவிபத்து
- ஒரு மருத்துவ நெருக்கடி
- நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு குற்றம்.

அவசியப்படும்பொழுது மொழிபெயர்ப்பு சேவைகள் 9-1-1 இனூடே கிடைக்கப்பெறும்.

## ஒரு நெருக்கடியின் பொழுது கீழ்வருவனவற்றிற்காக 9-1-1 இனை அழைக்காதீர்கள்:

- உறவினர்களை கண்டுபிடிப்பதற்கு
- உள்ளூர் பம்ப்புகளில் எரிவாயு கிடைக்கக்கூடியதைப்பற்றி அல்லது உள்ளூர் சேவைகளைப்பற்றி வினவுவதற்கு
- புகலிடங்கள் அல்லது வேறு சேவைகளின் அமைவிடத்தையோ பெறக்கூடிய வசதியைப்பற்றியோ அறிவதற்கு

- காவல்துறை, தீவிபத்து, அல்லது மருத்துவ உதவியாளர்களின் அவசரநிலை-இன்றிய தொலைபேசி இலக்கங்களை அறிவதற்கு.

ஒரு நெருக்கடியான சம்பவத்தின் பொழுது, அவசர பிரதிவினை அதிகாரிகளிடமிருந்து தகவல்களும் அறிவுறுத்தல்களும் செய்தி ஊடகங்களினூடே (தொலைக்காட்சி, வானொலி, மற்றும் இணையதள சேவைகள்) பெறக்கூடியதாக ஏற்படுத்தப்படும்.

## உயிரிற்கு ஆபத்தான நெருக்கடிநிலையில்,<br>9-1-1 இனை அழையுங்கள்